

# ANNAI WOMEN'S COLLEGE

**(Arts and Science)**

**(Affiliated to Bharathidasan University – Tiruchirapalli.)**

**TNPL Road, Punnamchathram, Karur.-639136**

## TAMIL DEPARTMENT

## COURS MATERIAL

# கல்வெட்டியல்.

அலகு - 1

பண்டைக் குறியீடுகளும் எழுத்துகளும் - தூவாக்குறிச்சி கல்வெட்டு எழுத்துக்கள் - தமிழ்நாட்டு எழுத்து முறைகளின் வளர்ச்சி - தமிழ்க் கல்வெட்டுக் கண்டுபிடிப்புகள்.

அலகு - 2

கல்வெட்டுகளும் இலக்கியமும் - தமிழ்க் கல்வெட்டுகளும் வரலாறும் - செப்பேடுகள் பதிப்பித்தலில் அணுகுமுறை - மெய்க்கீர்த்தி - இசையும் கல்வெட்டும்

அலகு - 3

சோழர் காலத்திய ஆவணப் பதிவு முறைகள் - சில அரிய சொற்கள் - ஆள் பெயர்கள் காட்டும் சமுதாயம் - மாராயமும் மாராயனும் - வைத்திய குலம்.

அலகு - 4

கல்வெட்டில் இசை - குன்றில் சமய ஒருமைப்பாடு - சேலம் மாவட்டக் கல்வெட்டுகள் - திருகாத அழகிய பெருமாள் - எழுத்துப் பொறிப்பு பெற்ற தீர்த்தங்கரர் திருமேனி - அமுங்காரும் அமுந்தியரும்

அலகு - 5

தொண்டியில் ஒரு புதிய கல்வெட்டு - வணிகர் நோக்கில் நாகப்பட்டினம் - தஞ்சை மராட்டிய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் - இசை ஆவணங்களும் முத்திரை இசைகளும்.

Scanned with CamScanner

# கல்வெட்டியல்.

## 1. பண்டைக் குறியீடுகளும் எழுத்துக்களும்.

இந்தியாவில் மிகப்பழைய எழுத்துக்கள் சுமார் கி.மு 2500 ஐச் சேர்ந்த சிந்துசமவெளிப் பண்பாட்டின் அகழ்விடங்களில் கிட்டிய ஒருவகை சித்திர எழுத்துக்கள் ஆகும். இவை பெரும்பாலும் முத்திரைகளில் பொறிக்கப்பட்டவை ஆகும். ஆனால் இவ்வகை எழுத்துக்கள் சுமார் கி.மு 1500-ல் சிந்துசமவெளிப் பண்பாடு சிதைந்த போது வழக்கில் இருந்து மறைந்துவிட்டன. மீண்டும் கி.மு மூன்றாம் நூற்றாண்டில் இந்தியாவில் பிராமி எழுத்துக்கள் வழக்கில் வந்தன. சிந்துசமவெளிப் பண்பாட்டு எழுத்துக்களின் மறைவிற்கும் பிராமி எழுத்துக்களின் தோற்றத்திற்கும் இடைப்பட்ட 1200 ஆண்டுகளில் தொடர்புடைய சான்றுகள் இல்லாமையால் பிராமி எழுத்துக்களின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றை அறியமுடியவில்லை. கி.மு 1500க்கும் கி.மு 300-க்கும் இடைப்பட்ட புதிய கற்காலம், செம்புக்காலங்களில் செய்த பானை ஓடுகளில் பெரும்பாலும் எழுத்துப் பொறிப்பு இல்லை. ஒருகால் இவர்கள் நிலையான பொருள்கள் ஆன முத்திரைகள், பனை ஓடுகள் முதலியவைகளில் எழுதும் வழக்கத்தைக் கைவிட்டு நிலையற்ற பனை ஓலைகள் போன்றவற்றில் எழுதியிருக்கக்கூடும். மீண்டும் கி.மு 300ல் நிலையான பொருள்களான பானை ஓடுகள், கற்குகைகள் காசுகள் முத்திரைகள் இவைகளில் எழுதும் வழக்கம் வந்திருக்க வேண்டும்.

குறியீடுகள் என்பது பெரும்பாலும் பானையின் வெளிப்புறத்திலோ அல்லது உட்புறத்திலோ பானை சுட்டபின் கீறப்பட்டவையாகும். இந்தியாவில் பானையின் மேல் பொறிக்கப்பட்ட இக்குறியீடுகளின் ஆய்வினை 1881-ல் பிராண்பில் என்ற அறிஞர் தொடங்கி வைத்தார்.

Scanned with CamScanner

பானை ஓட்டில் காணப்படும் குறியீடுகள் தமிழகத்தில் அகழ்ந்த பல்வேறு தொல்லியல் அகழாய்வுகளில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. அண்மையி(ல்) அகழாய்வு செய்யப்பட்ட திருக்காம்புலியூர், உறையூர், அழகன்குளம், கரூர், அல்லூர், கொடுமணல் போன்ற ஊர்களில் கிடைத்த குறியீடுகள் ஒன்றை ஒன்று ஒத்த நிலையில் காணப்படுவது சிறப்பம்சமாகும்.

அண்மையில் தமிழ்ப்பல்கலைக்கழகக் கல்வெட்டிய(ல்) துறையினரால் மேற்கொள்ளப்பட்ட வல்லம், கொடு(மணல்) அகழாய்வுகளில் இக்குறியீடுகள் கணிசமான அளவி(ல்) கிடைத்துள்ளன.

குறியீடுகள் எவற்றைக் குறித்தன, அவை எதனடிப்படையில் அமைந்தன என்பதற்கு அண்(மை) ஆய்வுகள் கீழ்க்கண்ட மூன்று கருதுகோள்களை வைத்துள்ளன.

* பானை செய்வோரின் சின்னம்
* பானை உரிமையாளரின் சின்னம்
* இனச் சின்னம்.

பானை செய்வோரின் சின்னம்.

ஒரு குறிப்பிட்ட அகழாய்வில் நூற்று(க்கு) மேற்பட்ட குறியீடுகள் கிடைத்துள்ளன. இவை பானை செய்வோரின் சின்னமாக இருந்தால் ஒரு குறிப்பிட்ட வ(சிப்பிட) இருக்கைப்பகுதியில் ஒரே கால கட்டத்தில் பல பானை செய்(வோர்) இருப்பதாகக் கருத வேண்டும். இது நடைமுறையில் இ(ருக்க) வாய்ப்பில்லை. மேலும் இவை அனைத்தும் பானை சுட்(ட பின்) கீறப்பட்டவை ஆகும். பானை செய்வோரின் சின்ன(ம்) இருப்பின் அவர்கள் பானை சுடுவதற்கு முன்பே எழு(தி) கீறியிருக்கலாம்.

Scanned with CamScanner

பானை ஓட்டில் ...



பானை உரிமையாளரின் சின்னம்.

பானை உரிமையாளரின் சின்னமாக இருப்பின் ஒரு உரிமையாளருக்கு ஒரு குறியீடு அல்லது ஒரு குறியீட்டுத் தொடர்தான் இருக்க முடியும். மேலும் இக்குறியீடு பல்வேறிடங்களில் சமகாலத்தில் கிடைக்கின்றன. இவை தவிர ஒரு குறியீட்டுத் தொடரில் உள்ள பல்வேறு குறியீடுகள் தம்முள் இடம் மாறியும் கலந்து வருகின்றன. இதைக் காணும்போது இவ்விளக்கம் ஏற்புடையதாகத் தோன்றவில்லை.

குலச்சின்னம்.

மேற்கூறியவற்றை நோக்கும் பொழுது ஈமச்சின்னங்களில் உள்ள குறியீடுகள் ஒரு குடும்பத்தின் குறியீடுகளாக வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம். ஆயினும் ஒரு குடும்பம் என்பதைவிட ஒரு கூட்டத்தின் குறியீடாக எடுத்துக் கொண்டால் மிகவும் ஏற்புடையதாக இருக்கும். ஏனெனில் ஒரே வகையான குறியீடு பல சின்னங்களில் கிடைக்கின்றது. ஒரு குறுகிய கால கட்டத்தில் ஒரே குடும்பம் அத்தனை ஈமச்சின்னங்களை எழுப்புதற்கு வாய்ப்பு மிகக்குறைவு எனலாம். உதாரணமாகக் கொடுமணல் அகழாய்வில் கீழ்க்கண்ட குறியீடுகள் வெவ்வேறு ஈமச் சின்னங்களில் கிடைப்பதைக் காணலாம்.

பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகள்.

பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்கள் தமிழக வரலாற்றிலும் தமிழ்நாட்டுக் கல்வெட்டு எழுத்துக்களின் வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்று விளங்கும் இன்றியமையாத கல்வெட்டுக்களாகும். சிவகங்கை மாவட்டத்துத் திருப்பத்தூர் வட்டத்தில் பூலாங்குறிச்சி அமைந்துள்ளது.

Scanned with CamScanner

இவ்வாறுள்ள மருதமலைச் சிவன் ஆலயத்தில் தமிழ்மொழியான் பிற்கால வடிவத்தில் அமைந்த மூன்று கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்றுள்ள கல்வெட்டு மட்டும் இன்னும் முழுமையாகப் படிக்க இயலவில்லை. படிக்கப்பெற்ற ஏனைய இரண்டு கல்வெட்டுகளும் பிற்காலத்து ஆண்ட சோழன், சோழன் கற்றன் என்ற மன்னர்களின் காலத்தினைச் சார்ந்ததுவாகும்.

இவ்வாறு கல்வெட்டுகளின் எழுத்துக்களை ஆய்வு செய்ததன் மூலம் பண்டைய தமிழிலக்கிய காலத்திற்கும் பல்லவர் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டில் வழக்கிலிருந்த தமிழ்பிராமி, வட்டெழுத்து, தமிழ் ஆகிய எழுத்துகளின் வரிவடிவங்களையும் அவை வளர்ந்து நிற்கும் முறையினையும் ஓரளவு அறிந்து கொள்ள முடிகின்றது.

உயிரெழுத்துக்கள்.

உயிரெழுத்துக்களில் அ, ஆ, இ, உ, எ, ஒ ஆகியவற்றின் வரிவடிவங்கள் இக்கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

ஈ, ஊ, ஏ, ஓ - ஆகிய உயிர்நெடில் வடிவங்கள் காணப்படவில்லை. இவ்வெழுத்துக்கள் இக்கல்வெட்டுக்களில் வரும் சொற்களில் பயிலப் பெறாமையால் அவற்றின் வடிவங்களை இங்குக் காணமுடியவில்லை. ஐகாரத்திற்கு வரிவடிவம் இருந்திருப்பது போன்று பிறவற்றிற்கும் வரிவடிவங்கள் இக்காலத்தில் வழக்கில் இருந்திருக்கலாம்.

Scanned with CamScanner

[illegible]

மெய்யெழுத்துக்கள்.

தமிழில் அமைந்த பதினெட்டு மெய்யெழுத்துக்களுக்கு வரிவடிவங்களையும் பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்களில் காணமுடிகின்றது. இவற்றில் மகரமெய் மட்டும் இக்கல்வெட்டுக்களில் வரவில்லை. மற்ற மெய்யெழுத்துக்கள் அனைத்தும் புள்ளியிட்டு எழுதப் பெற்றுள்ளன.

உயிர்மெய் வரிவடிவங்கள் நன்கு அறியும் வகையில் தெளிவாக எழுதப்பெற்றுள்ளன. ஒகரம் ஏறிய 'கொ, தொ' ஆகிய இரண்டு குறில்களும் அவை குறிலெழுத்துக்கள் என்று அறியும் வகையில் தலைக்கு மேலே புள்ளியிட்டு எழுதப்பெற்றுள்ளன. எனவே மெய்யெழுத்தினை வேறுபடுத்தி அறியும் வகையில் மெய்யாக்கிப் புள்ளியிட்டு எழுதும் வழக்கம் உயிர்மெய் எழுத்துக்களையும் நன்கு அறியும் வகையில் இக்காலத்தில் [illegible] பெற்றுள்ளது.

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் பூலாங்குறிச்சியின் இடம்.

தமிழ்நாட்டு பிராமியின் வரிவடிவங்களில் மீனாட்சிபுரம், ஆனைமலை, திருப்பரங்குன்றம், புகளூர், அரச்சலூர், அம்மன்கோயில்பட்டி, இருளப்பட்டி, பிள்ளையார்பட்டி, ஆகிய ஊர்களில் அமைந்த கல்வெட்டு எழுத்துக்களோடு பூலாங்குறிச்சிக் கல்வெட்டு எழுத்துக்களையும் கால- வரிவடிவ முறையில் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அரச்சலூர், அம்மன் கோயில்பட்டிக் கல்வெட்டுக்களின் காலத்திற்கும் இருளப்பட்டி நடுகல் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தியன அவை எனத் துணியலாம்

# தமிழ்நாட்டு எழுத்துமுறைகளின் வளர்ச்சி.

தென் இந்திய நாட்டில் அதிகப்படும் எழுத்துக்களின் அடிப்படையாகிய பிராமி எழுத்துக்களிலிருந்து அமைப்பட்டவைகளாகக் கருதப்படுகின்றன. தமிழ் எழுத்துக்களும் பிராமியிலிருந்து தோன்றிய எழுத்துக்கள் சில மாறுதல்கள் சான்றாகத் தமிழகத்திலுள்ள இயற்கைக் குகைக் கல்வெட்டுகளையும் அகழாய்வின் போது கிடைத்த பானை ஓடுகளில் கீறப்பட்ட எழுத்துக்களையும் அறிகின்றனர். எனினும் வட இந்தியாவில் கிடைக்கும் பிராமி எழுத்துக்களுக்கும் தமிழ்நாட்டில் கிடைக்கும் பிராமி எழுத்துக்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன. வட இந்திய பிராமியில் உள்ள வர்க்க எழுத்துக்கள் பிராமி எழுத்துக்களில் இல்லை. இதைத்தவிர வட இந்திய பிராமி எழுத்துக்களில் இல்லாத ழ, ள, ற, ன எழுத்துக்கள் இங்குக் கிடைக்கின்றன. இதைத் தமிழ் - பிராமி என்றும் தமிழி என்றும் அழைக்கின்றனர்.

தமிழ்நாட்டில் பிராமிக்குப்பின் மூன்று வகை எழுத்துக்கள் வழங்கிவருகின்றன. இவை வட்டெழுத்து, தமிழ், கிரந்த எழுத்துக்களாகும். இதில் கிரந்தம் சமஸ்கிருத மொழியையும் வட்டெழுத்தும் தமிழெழுத்தும் தமிழ் மொழியையும் எழுதப் பயன்படுத்தப்பட்டன. தமிழ் பிராமி எழுத்திலிருந்து வட்டெழுத்து வளர்ச்சி பெற்றதைக் கி.பி. 3, 4 ஆம் நூற்றாண்டையொட்டிய அரச்சலூர்க் கல்வெட்டும் 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சி கல்வெட்டும் உணர்த்துகின்றன.

கி.பி. 6, 7-ஆம் நூற்றாண்டுகளில் வட்டெழுத்து, தமிழ், கிரந்த எழுத்துக்களுடன் கூடிய கல்வெட்டுக்கள் அனைத்தும் பல்லவ மன்னர்கள் ஆண்ட தொண்டை மண்டலம் பகுதியில் கிடைக்கின்றன. பல்லவர்களின் தலைநகரான காஞ்சிபுரத்தைத் தன்னகத்தே கொண்ட செங்கல்பட்டு மாவட்டத்தில் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று கூடக் கிடைக்கப் பெறாமையாலும் தொண்டை மண்டலப் பகுதியல் பிற பகுதிகளான தருமபுரி, வடார்க்காடு மாவட்டங்களில் இக்காலகட்டத்தில் இவை அதிகமாகக் கிடைப்பதாலும் இவ்வரிவடிவங்கள் பல்லவர்களுக்கு முன்பிருந்தே தமிழ் மக்களால் வடிக்கப்பட்டன என்பது புலனாகிறது.

பிராமியிலிருந்து வட்டெழுத்தின் வளர்ச்சியை தொண்டை மண்டலத்தில் காண்கிறோம். அதே பகுதியில் 7-ம் நூற்றாண்டளவில்தான் தமிழ்க் கல்வெட்டுக்கள் கிடைப்பதால் தமிழ் எழுத்துக்களையும் வட்டெழுத்துக்களையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். கல்வெட்டுக்களில் 'ம' மற்றும் 'வ' எழுத்துக்கள் வட்டெழுத்துக்களின் சாயலைப் பெற்றுள்ளன. அதே போன்று திருக்கழுக்குன்றம் கல்வெட்டிலும் 'ழ' எழுத்தின் மெய் வட்டெழுத்தைப் போன்று உள்ளது.

இவ்வாறு தமிழ் வரிவடிவங்களைப் பகுத்துப் பார்க்கும் பொழுது தொடக்க காலத்திலிருந்து 9 ஆம் நூற்றாண்டு வரை தமிழ் எழுத்துக்கள் மெதுவாகத்தான் வளர்ச்சியுற்றிருக்கின்றன. இவ்வளர்ச்சியோடு ஒப்பிட்டால் ராஜராஜன் காலந்தொட்டு ஏற்பட்ட வளர்ச்சி வேகமானது என அறியலாம்.

Scanned with CamScanner

## தமிழ் கல்வெட்டுக் கண்டுபிடிப்புக்கள்

தமிழகத்தில் பல ஊர்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் பல அரிய தகவல்களை நமக்குத் தருகின்றன. இவற்றைக் கண்டறிவதில், அதைச் சிறப்பான முறையில் படித்துப் பொருள் கொள்வதில் அறிஞர்கள் பெரிதும் உழைத்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் முதன் முதலில் 1903-ல் வெங்கோபராவ் அவர்களால் மதுரை மாவட்டம் மேலூர் மாவட்டம் கீழவளவு என்னுமிடத்தில் பிராமிக் கல்வெட்டு ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனாலும் இக்கல்வெட்டின் முக்கியத்துவம் அப்போதைக்கு ஒருவராலும் உணரப்படவில்லை. இதன் பின்னர் 1906-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தின் ஆட்சித்தலைவராக இருந்த திரு. கமியேடு என்பவர் அம்மாவட்டத்தில் மறுகால்தலை என்னுமிடத்தில் ஒரு கல்வெட்டைக் கண்டறிந்து அறிவித்தார்.

1907-ம் ஆண்டு மேலும் சில பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டன. ஐபர்ட் என்பவரால் மதுரை மாவட்டம் அரிச்சியூரிலும் வெங்கையா அவர்களால் மேட்டுப்பட்டியிலும் கண்டறியப்பட்டது. மேலே குறிப்பிட்ட கமியேடு நெல்லை மாவட்டத்திலேயே வீரசிகாமணி என்னுமிடத்தில் ஒரு புதிய கல்வெட்டைக் கண்டுபிடித்தார்.

Scanned with CamScanner

அண்மைக் காலத்தில் பல தமிழ் பிராமி கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருவாதவூரில் இராவதம் மகாதேவனும், மீனாட்சிபுரம் அருகே ஏ. சுப்பராயலு, கே. வி. இராமன் ஆகியோரும் சேலம் மாவட்ட அம்மன் கோயில் பட்டியில் புலவர் யோ. வெங்கடராமனும் அரிய தமிழ் பிராமி கல்வெட்டுக்களைக் கண்டறிந்தனர்.

சுப்பிரமணிய ஐயர் தமது முன்னோடியான கிருஷ்ணசாஸ்திரியின் ஆய்வு முடிவுகளை எடுத்துக் கொண்டு மேலும் நுணுகி ஆராய்ந்து, தமிழுக்கே உரிய சிறப்பெழுத்துக்களையெல்லாம் அவற்றில் கண்டறிந்து பகுத்து இப்பிராமிக் கல்வெட்டுக்கள் யாவும் தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன என்று முதல் முதலாக நிறுவினார். இவர் தாம் கண்டறிந்த உண்மைகளை 1924-ல் சென்னையில் நிகழ்ந்த மூன்றாவது அனைத்திந்திய கீழ்த்திசை மாநாட்டில் சமர்ப்பித்தார்.

'பிராமி' கல்வெட்டுகளைக் கண்டுபிடித்த நமது முன்னோர்கள் அவற்றைக் கண்டறிய எடுத்துக்கொண்ட முயற்சிகள் செலவழித்த உழைப்பு, இந்திய ஆய்வாளர் அனைவராலும் வியந்து போற்றற்குரியதாகும். எட்டமுடியாத மலைகளுக்கெல்லாம் எவ்வித வசதியும் இன்றித் தம் உயிரைப் பணயம் வைத்து ஏறிச் சென்று வரலாற்றுக் கருவூலங்களைக் கண்டறிந்துள்ளனர்.

Scanned with CamScanner

அலகு - 2   40.

1. கல்வெட்டுக்களும், இலக்கியமும்

தமிழ்மொழியின் வரலாறு என்பது, அம்மொழியின் பழமை பெருமை சிறப்பியல்புகளும் அது வழங்கும் நாட்டின் அமைதி வழக்க ஒழுக்கங்களும் அதன் மக்களது வாழ்க்கைச் செய்திகளுமாகும். இவை நூல்களின் பருப்பொருள்களை ஆராய்தலால் பெறப்படக் கூடியன. இத்தகைய வரலாறுகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை அறியாதவர் -களென்றும் புறக்கணித்தவர்கள் என்றேனும் கூறமுடியாது. ஒரு நூலுக்கு முகவுரையாகிய பாயிரம் இன்றியமையாதது என்பது தெரிந்ததே. "ஆயிரம் முகத்தானமைந்ததாயினும் பாயிரமில்லது பனுவலன்றே" என்பது இலக்கணம்.

பாயிரம் - புறவுரை முகவுரை தோற்றுவாய் என்பன பரியாயச் சொற்கள். நூல்களுடையவும் நூலாசிரியருடை-யவுமாகிய வரலாறுகளும் பிறவும் நூல்களையாப்பவை என்றும் இவை நிற்க வேண்டும் என்ற எண்ணங்கொண்டு "ஆக்கியோன் பெயர் வழி, எல்லை, நூல்பெயர், யாப்பு, நுதலிய பொருள், கேட்போர் பயன், காலம், களன், காரணம் என்ற பதினொரு செய்தியையும் கொண்ட சிறப்புப்பாயிரத்தை ஒவ்வொரு நூலும் உடைத்தாயிருத்தல் வேண்டும் என்றும், இப்பகுதி பொருள்களை அறிதலால் நூன் பொருளாகிய நூல் மாணாக்கர்க்கு எளிதின் செல்ல இடனுண்டென்றும் ஆதிக்கையினர் பெரியோர்.

சாஸனங்கள் பெரும்பாலும் பாமர நடையாற் சிறந்தவை என்று சொல்வதற்கில்லை. அவற்றுக் கண்ணில் எழுதிய முறையின் எழுத்துப்பிழைகளும் இலக்கணக் குற்றங்களும் நிரம்பியுள்ளன. இவற்றைத் தமிழறிஞர் படித்தறிவதில் வருப்பங்கொள்ளுவது அரிதேயாம். ஆயினும் நம் தமிழ்முன்னோர் தம் காலத்துப் பேசியும் எழுதியும் வந்த முறைகளை இவை உணர்த்துவன என்று நாம் அவற்றைப் போற்றத்தக்கது.

சாஸனங்கள் பலவற்றின் இலக்கிய அழகுகளை மேலே நான் காட்டிய முறையில் எடுத்துக் காணத் தவறவில்லை. ஆகவே காலநிலைக்குத்தக்க பொருளுணர்ச்சியை அறிய வேண்டுமாயின், நம் தமிழ் மக்கள் இச்சாஸனங்களைக் கற்றல் இன்றியமையாதது என்று திரும்பவும் வற்புறுத்துகிறேன்.

நம் தேசத்தில் எவ்வளவோ காலமாக வழங்கி வரும் கலியப்தம் சகாப்தங்களாலன்றிக் கிறிஸ்தவாப்தத்தால் முன்னோர் காலக்குறிப்புகளை நான் அடிக்கடி கூற நேர்ந்ததை என்போன்ற பண்டிதர்கள் குறைவாக நினையார்கள் என்றே நம்புகிறேன். சாஸனப் பாடல்களைக் கல்வெட்டில் உள்ளபடி சாஸன இலாகாதார் பதிப்பித்து வருகின்றனர். இது ஒரு வகையில் நன்மையே. ஆனால் தக்க பண்டிதர்களைத் துணைகொண்டு சீர் அடி தளை முதலியன விளக்கும்படி பாடமுறுவனவாகவும் அவற்றைப் பதிப்பித்தலும் இன்றியமையாதது.

Scanned with CamScanner

## தமிழ்க் கல்வெட்டுக்களும் வரலாறும்.

தமிழ்நாட்டில் கல்லில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் ஏறக்குறைய கிறிஸ்துவுக்கு முன் இரு நூற்றாண்டுக்கு முன்பு தொடங்கி அண்மைக்காலம் வரை காணப்படுகின்றன. இவற்றோடு செப்புத்தகட்டில் எழுதும் வழக்கமும் ஆறாம் நூற்றாண்டு முதல் இருந்து வந்துள்ளது. ஆறாம் நூற்றாண்டு வரை, கல்வெட்டுக்கள் எண்ணிக்கையில் குறைவாகவே உள்ளன. மேலும் அவை ஓரிரு வரிகள் கொண்டவையாகவே பெரும்பாலும் காணப்படுகின்றன. 550 க்குப் பின் வட தமிழ்நாட்டில் பல்லவர் அரசும், தெற்கே பாண்டியர் அரசும் வளரும் நிலையில் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் எண்ணிக்கையிலும் வகையிலும் வளர்ந்தன. அதற்குப்பின் சோழர் ஆட்சிக் காலத்தில் குறிப்பாக 10-13 ஆம் நூற்றாண்டுகளில் கல்வெட்டுகளின் எண்ணிக்கை உலகில் வேறு எங்கும் எப்போதும் காண்டிராத அளவுக்கு உயர்ந்தது.

### கல்வெட்டுகளின் படிவமும் பொருளும்.

1. மங்கலச் சொல் அல்லது சொல்தொடர்
2. அரசனின் பெயரும் ஆட்சியாண்டும்
3. கல்வெட்டின் நோக்கம்
4. ஓம்படைக் கிளவி.

முதல் கூறான மங்கலச் சொல் பெரும்பாலும் ஸ்வஸ்திஸ்ரீ என்று தொடங்கும். சில போது, குறிப்பாகச் செப்பேடுகளில் சில தெய்வங்களின் மீதான சுலோகங்களைக் கொண்டிருக்கும்.

Scanned with CamScanner

வரலாற்றுச் சான்றுகள்.

கி.பி 4 ஆம் நூற்றாண்டு தொடங்கி 17 ஆம் நூற்றாண்டு முடிய உள்ள காலத்தில் தமிழ்நாட்டு வரலாறு பெரும்பாலும் கல்வெட்டுக்களை அடிப்படையாகவே வைத்து எழுத வேண்டியுள்ளது. பொதுவாக இந்தியாவின் பிற பகுதிகளின் வரலாறுகளுக்கும் இது பொருந்தும். அக்காலத்தைப் பற்றிய எந்த வரலாற்று நூலை எடுத்துப் பார்த்தாலும் இது விளங்கும். அதற்கு இலக்கியங்கள் ஏராளமே மேற்சான்றுகளைத் தந்துள்ளன. மேலும் பல இலக்கியங்களின் காலங்களே கல்வெட்டுச் செய்திகளைத் துணைக் கொண்டுதான் கணிக்கப்பெற்றுள்ளன.

பெரும்பாலான கல்வெட்டுகளுக்குக் காலத்தைக் கணித்தறிவது எளிது. வரலாற்றுக்குக் காலம் இன்றியமையாத ஒரு தேவையாகும். கல்வெட்டுக்களின் இன்னொரு சிறப்புத் தன்மை அவற்றின் உண்மைசார்பான, மிகைப்படுத்தாத நடையாகும். கற்பனை வளமும் எதையும் ஏற்றிச் சொல்லும் தன்மையும் கொண்ட இலக்கிய நடைக்கு இது மாறானதாகும். மெய்க்கீர்த்திப் பகுதிகளில் வரும் சில உயர்வு நவிற்சிகளையும், கற்பனைகளையும் விலக்கிவிட்டால் பெரும்பாலும் கல்வெட்டுக்கள் அன்றாடச் செய்திகளைத் திரிபில்லாமல் சொல்லுவதைப் பார்க்கலாம். இவை கோயில் கல்வெட்டுக்கள் ஆதலால் கோயில், சமயவழிபாடு தொடர்பான செய்திகளுக்கு அதிக இடம் கொடுப்பது தவிர்க்கமுடியாதது. இந்த ஒரு சார்புத் தன்மையை மட்டும் உணர்ந்து, மறக்காமலிருந்து இவற்றை வரலாற்று மூலங்களாகப் பயன்படுத்துவதில் தவறேற்படாது.

கல்வெட்டைப் பொறித்தவர்கள் அவற்றை வரலாற்று மூலங்களாகக் கருதவில்லை. நிகழ்ச்சிகளை காலமுறைப்படுத்திச் சொல்வதோ, பொருளாதார அரசியல் செய்திகளை விவரிப்பதோ அவர்களின் முக்கிய நோக்கங்களாகவில்லை. இக்கால வரலாற்று இயல் ஆய்வாளர்கள் இவற்றை வரலாற்று மூலங்களாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர் என்பதை மறந்துவிடக்கூடாது. தனித்தனியாகப் பார்த்தால் கல்வெட்டுக்கள் ஏதோ துண்டுச் செய்திகளை அரைகுறையாகத் தருவதாகத் தெரியும். ஒரு வட்டாரத்தில் கிடைக்கும், அல்லது ஒரு கால எல்லைக்குள் எழுதப்பட்ட கல்வெட்டுக்களை ஒரு தொகுதியாக நோக்கினால் தான் அவைகள் வரலாற்றுப் பொருளுடையனவாகப்படும்.

தொடர்புடைய கல்வெட்டுக்களைத் தொகுத்து ஒருசேர ஆராய்ந்தால் எப்படி சிறந்த வரலாற்று உண்மைகள் வெளிப்படும் என்பதை இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை வெளியிட்டு வரும் பருவ இதழான எபிகிராஃபியா இண்டிகா வரிசையில் வெளியாகியுள்ள பல சிறப்புக் கட்டுரைகளைப் பார்த்தால் விளங்கும். வெங்கட சுப்பா அய்யர் தொகுதி 28 இல் புங்கனூரில் கிடைத்த இரு கல்வெட்டுக்களைப் பதிப்பித்துள்ளார். இவை இரண்டிலும் அரசன் பெயர் குறிப்பிடப்படாமல் சக ஆண்டு கொடுக்கப்பட்டுள்ளது. இது போன்றே இவ்வட்டாரத்தில் சக ஆண்டுக் கல்வெட்டுக்கள் பல கிடைத்துள்ளன.

Scanned with CamScanner

## செப்பேடு பதிப்பித்தலின் அணுகுமுறை

உலோகங்களின் தங்கம், வெள்ளி, பித்தளை, செம்பு, ஈயம், இரும்பு முதலியவற்றை எழுத மக்கள் பயன்படுத்தினாலும் அவற்றுள் செம்பின் பயன்பாடே அதிகம்.

செம்பில் எழுதியவை செப்பேடு, பட்டயம், செப்புப்பட்டயம், தாமிர/தாம்பிர சாசனம், தாமிரப் பட்டயம், செப்புப்பத்திரம் எனப் பல பெயர்களால் அழைக்கப்பெறும்.

கி.பி ஆறாம் நூற்றாண்டு முதல் தமிழ்நாட்டில் செப்பேடுகள் கிடைக்கின்றன. பல்லவர், சேரர், பாண்டியர், சோழர் காலத்தில் செப்பேடுகள் நிறைய அளிக்கப்பட்டாலும், விஜய நகர மன்னர், நாயக்கர் மன்னர் காலத்திலும், சேதுபதி, தொண்டைமான் போன்ற சிற்றரசர் காலத்திலேயும், பாளையக்காரர் காலத்திலும் செப்பேடுகள் மிகவும் அதிகமாக அளிக்கப்பெற்றன. பிற்காலத்தில் கல்லில் எழுதும் மரபு குறைந்ததே இதற்குக் காரணம்.

கொடைச் செய்தி முதலில் ஓலைகளிலே எழுதப்பெற்றது. மன்னர் தொடர்புடைய அலுவலர்கள் கையொப்பமிட்டு கொடை பெற்றவர்களுக்கு நாட்டார் மேலாக ஓலை அனுப்பப்பெறும். பண்டைய செப்பேடுகளில் அந்த ஓலையை உரிய மரியாதையுடன் நாட்டார் பெற்று, கொடை நிலத்தையோ கிராமத்தையோ எல்லைகளில் பெண் யானை கொண்டு நடத்தி எல்லை தெளிவிக் கொடையை உரியவருக்கு அளிப்பர்,

பின்னர் இந்தக் கொடை நெடுங்காலம் நின்று நிலைக்கவும், எல்லோரும் அறியும் பொருட்டும் பின்னர் வரும் வேறு அரசர்கள் இக்கொடையைத் தவிர்க்காமல் இருக்கும் பொருட்டும் கோயில்களிலோ அல்லது பொது இடங்களிலோ கல்லில் வெட்டப்பெறும். இவை இயற்கையால் அழிந்து படுமாதலின், கொடை பெற்றவர் நீண்டகாலம் பயன்படுத்திக் கொள்ளச் செப்பேடும் வெட்டிக் கொடுக்கப் பெறும், இதனை

"கல்லிலும் செம்பிலும் வெட்டி
இவ்வூர் விட்டோம்"
"கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளச் சம்மதித்தோம்"
"இவை முறைபாடாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்
கொள்ளுக"

என்ற தொடர்களால் அறிகின்றோம். ஓரிடத்தில் "செப்பேட்டின் பொறிக்கப்படுவது மூன்றாம் பிரதி" என்ற குறிப்பு வருகிறது."

கூட்டெழுத்துக்கள் மற்றும் குறியீடுகள்.

இவைகளைப் போன்றே பல செப்பேடுகளில் கூட்டெழுத்துக்கள் வெட்டப்பட்டிருக்கும். இக்கூட்டெழுத்துக்கள் சரியாகப் பார்க்கப் பெறாவிட்டால் குழப்பமே நேரிடும். பல சொற்கள் குறியீடுகள் மூலம் குறிக்கப்பெறும். ஆண்டு, மாதம், தேதிகள், நிலம், பொன், காசு, பணம், வாரம், நாள், கலம் போன்ற சொற்கள் குறியீடுகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

Scanned with CamScanner

வரிவடிவங்கள்

செப்பேடுகள் கிடைக்கும் இடங்களுக்கேற்ப வரிவடிவில் சில மாற்றங்கள் காணப்படும். வடசொற்களும் சுலோகங்களும், கிரந்த எழுத்துக்களில் எழுதப் பெற்றிருக்கின்றன. தமிழ் வரிவடிவச் சொற்களில் இடை இடையே கிரந்த எழுத்துக்கள் வரும். பல செப்பேடுகளில் இடைஇடையே தெலுங்கு, கன்னட, மராத்தி எழுத்துக்களில் அமைந்த சொற்களும் காணப்படும்.

சில மயக்கங்கள்

பிற்காலச் செப்பேடுகளில் சில எழுத்து மயக்கங்கள் காணப்படுகின்றன. ர-ற; ண-ந-ன; ல-ள-ழ; ங-வ-ல; ஆகியவை மாறி ஒன்று வரவேண்டிய இடத்தில் மற்றொன்று பொருள் உணர்ச்சியின்றி எழுதப் பெற்றிருக்கும்.

சாடீ என்பதை சரடீ, சாடெ, சர்டீ, சரம் எனப் பல்வேறு சொற்களைப் படிக்க நேரிடுகிறது. பொருள் உணர்ச்சிக்கு ஏற்றவாறு சரியான பாடம் கொள்ள வேண்டும். காத்தார் - கரத்தார் என்னும், கரந்தை - காந்தை என்னும் படிக்கப்படுகின்றது. ஆகார ஐகார இலிங்குப் பின்னர் யகரமெய்யைச் சில செப்பேடுகளில் எழுதப்பெற்றுள்ளது.

## மெய்க்கீர்த்தி.

### மெய்க்கீர்த்தியின் பொருள்

மெய்க்கீர்த்தி என்ற தொடரில் மெய் என்பதே சொல்லுக்குப் பெரும் உண்மை என்ற பொருளையே கூறுகின்றனர். ஒருவரது புகழைப் பேச வருகின்றவர் நான் உண்மையான புகழைக் கூறுகின்றேன் எனக் கூறித் தொடங்குவார்கள் என்பது ஐயத்திற்கிடமாக உள்ளது. அபிதான சிந்தாமணியும் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியும் அவற்றின் தொகுப்பாளர்கள் முறையே மெய்க்கீர்த்தி என்பதற்கு

சொற்சீரடி என்னும் கட்டுரைச் செய்யுளால்
ஒரு முறையில் செய்த கீர்த்தியைக் கூறுவது

அரசனது புகழ் வரலாற்றினைக் கூறி அவன்
தேவியுடன் வாழ்க என்று வாழ்த்தி அவன்
இயற்பெயருடன் ஆட்சி வருடத்தைக் கூறும்
பாடல் வகை எனப்பொருள் தருகின்றனர். இவற்றில் கீர்த்தியை மட்டுமே காண்கிறோம்.

### இராசராசனுக்கு முற்பட்ட மெய்க்கீர்த்திகள்

மெய்க்கீர்த்தி பற்றி எழுதுவோரும், இராசராசன் வரலாறு எழுதுவோரும் இராசராசன் காலத்தில் தான் முதன்முதலில் மெய்க்கீர்த்தி கல்வெட்டில் பொறிக்கப்பட்டது என்று எழுதியுள்ளனர்.

Scanned with CamScanner

[illegible] மெய்க்கீர்த்தி

காலம் செல்லச் செல்லத் தமிழக அரசர்தம் மெய்க்கீர்த்திகள் மெல்லச் சரிவடைந்தன. வீர ராஜேந்திரனின் மெய்க்கீர்த்தி 158 அடிகளையும் அதிராஜேந்திரனின் மெய்க்கீர்த்தி 132 அடிகளையும் கொண்டதாக விளங்குகிறது. எனவே எல்லாக் கல்வெட்டுக்களுக்கும் மெய்க்கீர்த்திகளை எழுதுவ-தென்பது இயலாத காரியமாகவும் இருந்தது. இவ் கோயில் சுவர்களில் போதுமான அளவு இடம் இன்மையும் ஒரு காரணமாக இருக்கலாம்.

அதனால் முழு மெய்க்கீர்த்திகளுக்குப் பதிலாக

'ஸ்ரீமெய்க்கீர்த்திக்கு மேல்'
ஸ்ரீ மெய்க்கீர்த்திக்கு முன்னாக
'புயல்வாய்த்து வளம்பெருக என்கிற பாடல் வரி'
'ஸ்ரீமெய்க்கீர்த்தி எழுதிட இடம் இன்மையால்'
'ஸ்ரீ மெய்க்கீர்த்தியுடைய திரிபுவனச் சக்ரவர்த்திகள்'

என்ற தொடர்கள் மட்டும் எழுதப்பெற்ற கல்வெட்டுக்களைக் காண்கிறோம். இவ்வமைப்புப் பாண்டியர் கல்வெட்டுக்களில் அதிக அளவும், சோழர் கல்வெட்டுக்களில் குறைந்த அளவிலும் காணப்பெறுகின்றன. 'ஸ்ரீ மெய்க்கீர்த்தி' எனும் பாடாமல் கூறுவதையே கல்வெட்டு மெய்க்கீர்த்தி' எனக் குறிக்கிறது.

## அலகு - 3

## சோழர் காலத்திய ஆவணப் பதிவுமுறைகள்

சோழர் காலத்தில் ஆவணங்களின் வகைகளும் அவை எழுதப்பட்ட முறைகளும் நிறையக் காணப்படுகின்றன. தன்மையால் கல்வெட்டுகள், தாமிர ஆவணங்கள் என்றாலும் அவை மேலும் பல்வகையான ஆவண வகை, முறைகளைக் காட்டி நிற்கின்றன. இவ்வகை முறைகள் ஒரு குறித்த தலைப்பின்கீழ் சொல்லப்பட வேண்டியவை ஆகும்.

வகைகள்:

ஆவணம்:

விலை ஆவணம், நிலவிலை ஆவணம், பங்குவிலை ஆவணம் என்ற வகை வகையான ஆவணங்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

பிரமாணம்.

விலைப் பிரமாணம், நிலவிலைப் பிரமாணம், [illegible] பிரமாணம், இறைகாவல் பிரமாணம், ஆசிரியப் பிரமாணம், பரியப் பிரமாணம், சண்டேச்வரப் பிரமாணம் என்ற பிரமாணம் என்ற சொல்லாட்சி சோழர்கள் காலக் கல்வெட்டுக்களில் படிந்து வருகிறது. அவ்விலைப் பிரமாணம் மேலே தனியாக விவரிக்கப்பட்டுள்ளது. ஆசிரியப் பிரமாணம் என்பது அந்நியவர்களுக்கு அடைக்கலமளிப்பது தொடர்பானது.

Scanned with CamScanner

திட்டு.

திட்டு என்பது எழுதப்பட்டது என்ற பொருள்படும். கைத்திட்டு, ஒட்டிசைவுத்திட்டு, நிலைமைத்திட்டு, அடைவோலைத் திட்டு, ஏவல் திட்டு, அறைப் பிரமாணத்திட்டு, உயத்திட்டு, இசைவுத்திட்டு, என்ற சோழர் காலக் கல்வெட்டுகள் பல வகைத் திட்டுகளைக் காட்டுகின்றன.

ஓலை

அறையோலை, இறையோலை, இறைகாவல், ஓட்டோலை, பொருள் மாவதிப் பாருட்செலவோலை, சிலவோலை, அடையோலை, செம்போலை, ஆவோலை, அறிதிப் பரிவர்த்தனை ஓலை என்ற பல வகைகள் உள்ளன. மன்னன் கொடையாக நிலங்களைக் கொடுத்தது பற்றிய ஆணை நாட்டாரிடம் வரும்போது நாட்டார் ஆணையைத் தலைமேல் ஏற்று நிலங்களின் எல்லை காட்டி அறவோலை செய்து கொடுத்தனர் என்று செப்பேடுகள் பலவற்றிலும் காணப்படுகின்றன.

ஆவண வழக்காறுகள்:

எழுத்து: ஆவணம் எழுதிக் கொடுப்பவர்கள் இறுதியில் கையொப்பமிடுவது என்ற மரபு சோழர் காலத்தில் மிக அவசியமானதாக இருந்தது. 'இவை என் எழுத்து" என்று பெயர்களுடன் ஆவணத்திற்கு கையொப்பமிட்டு உயிர்கொடுத்து விளங்கின.

Scanned with CamScanner

அறிவேன்:

ஆவணங்களில் சாட்சிக் கையெழுத்து இடுவது என்பது சோழர் காலத்தில் பரந்து காணப்படுகிறது. சாட்சிக்கையொப்பமிடுபவர்கள் 'இப்படி அறிவேன்' என்று தங்கள் பெயர்களுடன் ஒப்பமிடுவர் 'இது என் எழுத்து' என்று எழுதினர். ஓர் ஆவணத்தில் பல சாட்சிக்கையொப்பங்கள் எழுதினர்.

அறுத்துக் குடுத்தல்:

கொடையாகக் கோயிலுக்கு கொடுக்கப்பட்ட ஆடு, நிலம் போன்றவை பராமரிப்புக்காக மற்றொருவருக்கு கோயிலைச் சேர்ந்தவர்கள் கொடுப்பது 'அறுத்துக் குடுத்தல்' என்று வழங்கியது. 'இவ்வாறு அளப்பதும் இடையர்க்கு அறுத்துக் குடுத்து' 'உலோகமாதேவியார் தங்களுக்கு நிலம் அறுத்துக் குடுத்தோம் ஆழ்வார் திருவடிகளோம்' போன்ற கல்வெட்டு வரிகள் இதை விளக்கும்.

ஆவணம் எழுதியவர்கள்: ஆவணங்களை எழுதியவர்கள் ஊர்க்கணக்கர், மத்யஸ்தர் போன்றவர்கள் ஆவணங்களை எழுதியவர்கள் தங்கள் கையொப்பத்தை ஆவணங்களில் இட்டார்கள். எழுதினேன் வேட்கொவன்' இக்கோயில் முதல் கணக்கு திருவாரூருடையான் கலி கண்ணவதி எழுத்து போன்ற சொற்றொடர்கள் இதனை விளக்கும்.

Scanned with CamScanner

இப்பெயர்களின் பகுதிகள் சில ஜாதிகளின் அடிப்படையில் அமைந்தவை ஒரு பகுதி பெற்றோர் இட்ட பெயராகவும், மற்றவை முறையே ஊர், கோத்திரம் அல்லது குடி, தந்தை பெயர், பட்டப்பெயர் எனவும் இருப்பதைக் காணலாம். இப்பகுதிகளை உள்ளடக்கிய அடிப்படை வரைவை எண் குறியீட்டில் கீழ்வருமாறு அமைக்கலாம்.

ஊர் குடி தந்தை தான் பட்டம்.

இன்று தமிழ்நாட்டில் வழங்கும் பெயர்கள் பெரும்பாலும் தந்தையின் பெயரை முதலாவதும் தன் பெயரை இரண்டாவதாகவும் வைத்து இருபகுதிப் பெயர்களாக வழங்குகின்றன.

குடியான், உடையான் முதலிய அடைகளையுடைய ஊர்ப்பகுதி கொண்ட பெயர் குறிப்பிட்ட ஆளின் ஊரைக் குறிக்கிறது என்று கருதப்படுவது வழக்கம். ஆனால் இப்பெயர்களையும் பெயர்களுக்குரியோரின் செயல்களையும், பதவிகளையும் ஊன்றிப் பார்த்தால் வெளிம் ஊரை மட்டும் குறிப்பனவாகக் கொள்ளமுடியவில்லை

'வேளான் வகையில் வேளாளன் அல்லது மூவேந்த வேளான் என்ற பின்னொட்டுகள் ஆளப்படுகி

## சேலம் மாவட்டக் கல்வெட்டுக்கள்.

சேலம் மாவட்டக் கல்வெட்டுக்கள் வரலாற்றுக்கு ஏற்ற ஆய்வுக்குத் துணை நிற்கின்றன என்பதை அம்மாவட்டக் கல்வெட்டுச் சான்றுகளின் ஆய்வாக அமையலாம். இம்மாவட்டத்தில் 330 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவற்றின் பெரும்பான்மை தமிழ்க் கல்வெட்டுக்களாகும். சில கல்வெட்டுக்கள் வடமொழி, கன்னடம் ஆகிய மொழிகளில் பொறிக்கப் பெற்றுள்ளன. கோயில்களில் சுண்ணாம்பு பூசியும், சுவர் எழுப்பியும், கல் பொறிந்தும் சிதைந்தும் காணப்பெறுதலால் சில கல்வெட்டுக்கள் நன்முறையில் படிக்க இயலாத நிலையில் அமைந்துள்ளன.

1886 முதல் 1980 வரையிலான காலத்தில் இம்மாவட்டத்தின் 267 கல்வெட்டுக்கள் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டியல் பிரிவினரால் படிக்கப்பெற்றுப் பாதுகாத்து வரப்பெறுகின்றன. இவற்றின் 71 கல்வெட்டுக்கள் இதுவரை பாடங்களோடு வெளிவந்துள்ளன.

சேலம் மாவட்டத்திலுள்ள கல்வெட்டுக்களில் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்பெறுவது ஓமலூர் வட்டம் அம்மன்கோயில் பட்டி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டாகும். அதன் பாடம் வருமாறு:

"பரம்பன் கோகூர் கிழார் மகன் வியக்கன் கோபன்
கணேவன் தொட சுனை"

சோழர் கால ஆட்சியைச் சார்ந்த முதல் கல்வெட்டு முதலாம் பராந்தகனின் பத்தாம் ஆட்சியாண்டில் (917) பொறிக்கப்பெற்ற கூனிப்பட்டி நடுகல் கல்வெட்டாகும். இதையடுத்து அதே ஊரில் இரண்டாம் ஆதித்த கரிகால சோழனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றும் காணப்பெறுகிறது. அடுத்து கொல்லிமலைப் பகுதியில் உத்தம சோழனின் பத்தாம் ஆட்சியாண்டு முதல் பதினாறாம் ஆட்சியாண்டு வரையிலான நான்கு கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்றுள்ளன நடுகற்கள்.

சேலம் மாவட்டத்தில் மிகச்சில நடுகற்களே உள்ளன. கூனிப்பட்டியில் இரண்டும், செந்தாரப்பட்டியில் ஆறும் இராசிபுரத்தில் ஒன்றும், ஆக 12 நடுகற்கள் இம்மாவட்டத்தில் கிடைக்கின்றன.

திருச்செங்கோடு

திருச்செங்கோட்டில் 38 கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் திருச்செங்கோடுக் கோயில் திருஏகாதசி கணப்பெருமக்கள், திருவாதிரை கணப்பெருமக்கள், திருவோணக் கணப்பெருமக்கள், துவாதசி கணப்பெருமக்கள் ஆகியோர் குறிப்பிடப் பெற்றுள்ளனர். இக்கணப் பெருமக்களிடம் 'காசைட்டாங்கள்' என்னும் அளவினால் நிச்சகம் பெற்ற பொன்னைக் கொடுத்து அதனின்றும் வந்த வட்டியைக் கோயில் பிராமணர்களுக்கு உணவு படைத்தலை செய்து குறிப்பிடப்பெற்றுள்ளது.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

Scanned with CamScanner

காதணி ஒன்றும் இல்லாமல் இருக்கும்போதே மிகுந்த அழகு பெற்றவன் என்ற பொருளில் 'விடுகாது அழகிய பெருமாள்' என்ற இவன் பெயர் அமைந்திருக்கலாம். விடுகாதழகியர் என்பதற்கு விடுகாது அணியும் தோடிட்ட காது என்றும் தெரியும் காண்' என்று 'திவ்வியப் பிரபந்த உரையில் பொருள் கூறப்படுகிறது'.

விடுகாதழகிய பெருமான்.

தொடர்ந்து வரும் அதியர் குடியில் 12 ஆம் நூற்றாண்டில் இறுதியில் விடுகாதழகிய பெருமாள் என்ற பெயருடையவன் வாழ்ந்து வந்தான். இவன் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தவன்.

ராஜராஜ அதிகமான், நிறைந்த பெருமாள் என்ற பெயர்கள் இவனுக்கு வழங்கின. 'ஆண்டார் அதியமானார்' என்ற மரியாதையுடன் கல்வெட்டுக்களில் இவன் குறிக்கப்படுகின்றான். அதிகேசன், அதிகேந்திரன் எனவும் அழைக்கப்பட்டான்.

இவன் சிற்றரச மன்னராகத் தகடூரில் இருந்தாலும் தேவைப்பட்டபோது சோழருக்குப் படைத்தலைமை பூண்டு பணியின் ஆற்றியுள்ளான். கல்வெட்டுகளில் இவன் 'சாமந்தன் அதியமான்' என்றும் குறிக்கப்பெறுகிறான். 'கார் அணைய கையான் வரை மருவும் தார் மார்பன்' என்றெல்லாம் புலவர் விடுகாதழகிய பெருமானைப் பாடல்களில் புகழ்கின்றனர்.

Scanned with CamScanner

# தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும்.

## தஞ்சை மராட்டியர் மரபு.

மராட்டிய மாவீரர் சிவாஜியின் (1640-1680) தந்தை சாஜி போன்ஸ்லே. அவர் பீசப்பூர்ச் சுல்தானின் படைத்தலைவராகத் தென்னகத்தில் படையெடுத்துப் பெற்ற வெற்றியின் காரணமாகப் பெங்களூர்ப் பகுதியைச் சாகீர் ஆகப் பெற்றார்.

## ஆவணங்கள்.

சமயம், மொழி, இலக்கியம், மருத்துவம், கலை இவைகளைப் பேணிவளர்த்த தஞ்சை மராட்டிய அரசர்கள் தமிழ், தெலுங்கு, மராத்தி, பாரசீகம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பல்வேறு வரலாற்று ஆவணங்களை விட்டுச் சென்றுள்ளனர். அன்றாட அரசு நடவடிக்கைகளை அவர்கள் மோடி எழுத்துக்களில் எழுதி வைத்துள்ள பல்லாயிரக்கணக்கான ஆவணங்கள் இன்னும் சரியாக ஆய்வு செய்யப்பெறவில்லை. தமிழக அரசர்கள் போலப் பல கல்வெட்டுக்களையும் செப்பேடுகளையும் பொறித்துள்ளனர்.

## கல்வெட்டுக்கள்.

மராட்டியர் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் தஞ்சை மாவட்டத்திலும் சில வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு பாண்டிச்சேரி சென்னை ஆகிய

Scanned with CamScanner

## ஓலை ஆவணங்களும் முத்திரை ஓலைகளும்.

ஆவணம் என்பது ஒரு பழந்தமிழ்ச் சொல். சங்க இலக்கியத்தில் பயின்றுவந்த சொல். தேவாரம், பெரியபுராணம், கந்தபுராணம் ஆகிய இலக்கியங்களிலும் தொடர்ந்து வழங்கி வருகிறது. உரிமைப்பத்திரம், ஒப்பந்தப் பத்திரம், நிகழ்ச்சிகளின் பதிவுப்பத்திரம் என்னும் பொருளில் தருவது.

அப்பத்திரங்களைப் பல்வேறு பொருள்களில் எழுதிவைக்கும் வழக்கம் முன்பு இருந்தது. ஓலைகளில் எழுதப்படும்போது அவை ஓலை ஆவணங்கள் எனப்பட்டன. பிற பொருள்களில் எழுதப்பெறும் ஆவணங்கள் கூட முதலில் ஓலைகளிலேயே எழுதப்பட்டன.

கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆட்சிக் காலத்தில் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காகிதம் புழக்கத்தில் வந்துவிட்டது. இருப்பினும் காகிதம் கிடைப்பது மிகவும் அரிதாக இருந்தது போலும். அதனால் மக்கள் தம் பழைய வழக்கப்படியே தொடர்ந்து ஓலைகளிலேயே எழுதலாயினர். அவ்வாவணங்கள் எழுதும் ஓலைகளில் கிழக்கிந்தியக் கம்பெனியார் தமது முத்திரைகளைப் பொறித்து விற்றனர். அவை முத்திரை ஓலை, அச்சு ஓலை, அச்சுப் பத்திரம், அச்சடி பத்திரம், அச்சடித்த பத்திரம், என்று பலவாறு குறிக்கப்பட்டன.